

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.10.2023) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் பி.வில்சன் சந்தித்தபோது, புதுதில்லியில் அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பின் மாநாட்டினை சிறப்பான முறையில் ஒருங்கிணைத்து நடத்தியமைக்காக முதலமைச்சர் அவர்கள் வாழ்த்து தெரிவித்தார். உடன் வழக்கறிஞர்கள் ரிச்சர்ட்சன் வில்சன், ஜி.தினேஷ் ஆகியோர் உள்ளனர்.

### இந்தியாவையே திரும்பிப்பார்க்க வைத்த மகளிர் உரிமை மாநாட்டை

# தலைமையேற்று சிறப்புற நடத்தி கொடுத்த முதல்வருக்கு நன்றி!

### ஜெ.ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் பா.ராணி அறிக்கை!

சென்னை, அக். 18 -

கழக மகளிர் அணிச் செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

“ இந்தியாவை திரும்பி பார்க்க வைத்த தி.மு.கழக மகளிர் உரிமை மாநாடு. ”பெண்களின் முன்னேற்றமே சமுதாய மு ன்னேற்றமென ஓயாது உழைத்தவர் தமிழினத்தலைவர் கலைஞர் அவர்கள்.அவரது நூற்றாண்டை முன்னிட்டு தி.மு.கழக மகளிர் அணி ஒருங்கிணைப்பில் மகளிர் உரிமை மாநாட்டினை தலைமை தாங்கி சிறப்புற நடத்தி கொடுத்த தி.மு கழகத்தின் தலைவர், தமிழநாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும்

இண்டியா கூட்டணியின் பெண் தலைவர்களை ஒருங்கே இணைத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க இம் மாநாட்டினை வெற்றி மாநாடாக முன்னின்று செய்த கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.,

கழக பொதுச் செயலாளர் அமைச்சர் துரை முருகன் விழாவினில் பங்கேற்று சிறப்பித்த இண்டியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கழக முதன்மை செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு மற்றும் கழகத்தின் துணை பொது செயலாளர்கள் விழாவினில் பங்கேற்பு செய்து சிறப்பித்த அமைச்சர் பெருமக்களுக்கும் மகளிர் மாநாட்டு நிகழ்ச்சியினை முன்னின்று செய்து சிறப்பானதொரு முறையில் விழா ஏற்பாட்டினை செய்து கொடுத்த அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன் , அமைச்சர் தா. மோ. அன்பரசன் ஆகியோரும் தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும், மாவட்ட கழக செயலாளர்களுக்கும், பாராளுமன்ற, சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்களுக்கும் கழகத்தின் சார் பணி நிர்வாகிகளுக்கும் , 2024 பாராளுமன்ற தேர்தலில் ஒன்றிய அரசில் ஒரு மாற்றத்தை உருவாக்கும் வகையில் வெற்றி மாநாடாக்கிய சிறப்பாக செயல்பட்ட கழக தூண்களாம் மகளிரணியின் அன்புச்சகோதரிகள் அனைவருக்கும் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர, ஒன்றிய, நகர மற்றும் பேரூர் பகுதி கழக நிர்வாகிகள் அனைவருக்கும் மற்றும் ஏனைய கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவருக்கும் கழகத்தின் மாநில மகளிரணி மற்றும் மாநில மகளிர் தொண்டரணியின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி தலைமை

# நாமக்கல் கிழக்கு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் - பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நாமக்கல், அக். 18 -

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, மாநில தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழிகாட்டுதல் படி தமிழ்நாடு முழுவதும் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக நாமக்கல் கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் நளா ஹோட்டலில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பொன். சித்தார்த் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் பேசிய இராஜேஸ்குமார் எம்.பி, நாமக்கல் மாவட்டம் முழுவதும் தகவல் தொழில் நுட்ப அணியினர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசின் சாதனைகளையும், திமுகவின் கொள்கைகளையும் மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும். திராவிட மாடல் ஆட்சியின் வருங்கால சந்ததியினரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். வருகின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் கழகத்தின் வெற்றிக்காக பாடுபட வேண்டும். திமுகவின் கொள்கைகளையும் திராவிட நாடு ஆட்சியில் சாதனைகளையும் அவ்வப்போது இணையதளத்தில் பதிவிட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தகவல் தொழில் நுட்ப அணி என்பது கழகத்தின் செயல்பாடுகளை மட்டும் இணையதளத்தில் பதிவிடுவதை மட்டுமல்லாமல், தற்பொழுது தாய்க் கழகத்தையே மிஞ்சுகின்ற வகையில் இந்த அணியின் செயல்பாடுகள் இருந்து வருகிறது. தமிழகத்தில் அதிக அளவில் தொழில்நுட்ப பூங்கா வருவதற்கு காரணமாக இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தொலை நோக்குப் பார்வையோடு கொண்டு வந்த திட்டம் தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்னும் பன்மடங்கு பன்மடங்கு மெருகேற்றி செயலாற்றி வருகிறார். மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர்களில் மகளிர் உரிமைத் தொகை விண்ணப்பிக்காதவர்களை கண்டறிந்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்து அவர்களுக்கு வழி காட்ட வேண்டும். இந்த அணியில் உள்ளவர்கள் தங்களது பகுதியில் இ - சேவை மையம் தொடங்க எண்ணினால் அதற்கு மாவட்ட கழகம் உரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கும். கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தில் விடுபட்டவர்களை பதிவு செய்யும் பணியில் சிறப்பாக செயல்பட்ட தகவல் தொழில் நுட்ப அணியினரை பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

தொடர்ந்து வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் பேசும்போது, வருகின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தல், வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் ஆகியவற்றை முன்னெடுப்பாக நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டும். தி.மு.க.வின் கொள்கைகளை விளக்கி, எதிர்கால சந்ததியினருக்கு திராவிட மாநில ஆட்சியின் சாதனைகள் மற்றும் கொள்கைகளை இளைஞர்களுக்கு எடுத்துரைத்து, திராவிட மாடல் ஆட்சி குறித்து விழிப் புணர்வு கொண்டு வர வேண்டும். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திமுக தொண்டர்களை பார்த்து சோல்ஜர்ஸ் என்று கூறினார். அதுபோல் தகவல் தொழில்நுட்ப அணியினர் அனைவரும் ஐடி சோல்ஜர்ஸ் என் றார். அணியினர் அனைவரும் மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமையில் அவரது வழிகாட்டுதலுடன் செயல்பட வேண்டும் என்றார்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் விஸ்வநாத், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பொன். சித்தார்த், மாவட்டப் பொறியியல் அணி அமைப்பாளர் ப.கிருபாகரன், தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் சர்தார் ஜான், சரவணன், பூபதி, சுதா ஜெயக்குமார்,, தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், தொகுதி சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் வேலூரில் நடந்தது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. பேசினார். அருகில் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மலர்விழி லோகநாதன், ஜி.எஸ்.அரசு, எஸ்.பாண்டியன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு ஆகியோர் உள்ளனர்.

---

# இந்தியப் பெண்களின் உரிமைக் குரலான ‘திராவிட மாடல்!’

அண்ணா.. ஸ்டாலின் அண்ணா” என்று நெஞ்சம் கொஞ்சும் மழலைத் தமிழிலும், “அக்கா...கனிமொழி அக்கா” என்று இதயம் குளிரும் குழந்தைத் தமிழிலும் இந்திய அரசியலின் முன்னணி பெண் தலைவர்கள் ஒவ்வொருவரும் உளப்பூர்வமாக அழைத்த நிகழ்வு சென்னையை மட்டுமல்ல, இந்தியா முழுமையையும் கவனிக்கச் செய்திருக்கிறது.

தி.மு.க. மகளிரணியின் சார்பில் அக்டோபர் 14 அன்று சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடத்தப்பட்ட மகளிர் உரிமை மாநாட்டில் சோனியா காந்தி அம்மையார் தொடங்கி அத்தனை பெண் தலைவர்களும் மகளிர் உரிமை காப்பதில் தமிழ்நாட்டின் அளப்பரிய பங்களிப்பை எடுத்துரைத்தனர்.



**கோவி.லெனின்**
பத்திரிகையாளர்

ஜம்முகாஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முஃப்தி முதல் கேரளாவை சொந்த மாநிலமாகக் கொண்ட இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆனி ராஜா வரை, இந்தியாவின் வடக்கு எல்லை முதல் தெற்கு எல்லை வரையிலான பல மாநிலங்களைச் சேர்ந்த பெண் ஆளுமைகளும் மகளிர் உரிமை காப்பதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்வதை ஒவ்வொரு திட்டத்தின் வாயிலாகவும் எடுத்துக் காட்டினர்.

1989ஆம் ஆண்டிலேயே கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட்ட குடும்பச் சொத்தில் பெண்களுக்கு சமபங்கு, வேலைவாய்ப்புகளில் மகளிருக்கு 30% இடஒதுக்கீடு, ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம், கர்ப்பிணிப் பெண்கள் மகப்பேறு உதவித் திட்டம் எனப் பலவற்றையும் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி, தேசியவாத காங்கிரஸ் எம்.பி. சுப்ரியா சுலே, சமாஜ்வாடி கட்சியின் டிம்பிள் யாதவ் எம்.பி, ஆம் ஆத்மி கட்சியின் ராக்கி பிட்லன், திரிணாமூல் காங்கிரசின் சுஷ்மிதா தேவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் சுபாஷினி அலி எனப் பலரும் எடுத்துரைத்தனர்.

பெண்கள் நலன் காப்பதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முன்னோடித் திட்டங்கள் சமூக நீதிக் கண்ணோட்டத்துடன் வெற்றிகரமாக செயல்பட்டதை கலைஞரின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தில் பேசிய ஒவ்வொருவரும் அவரவர் மொழியில் நினைவுகூர்ந்தது பெருமித நிகழ்வு. தலைவர் கலைஞரின் வழியில் திராவிட மாடல் ஆட்சியைத் தொடர்ந்து நடத்தி வரும் கழகத் தலைவர் அவர்கள் புதுமைப் பெண் திட்டம், விடியல் பயணம் திட்டம் என வரிசையாகப் பல திட்டங்களை தந்து, இந்தியாவில் எந்த மாநிலமும் சாதிக்காத கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை நிறை வேற்றியிருப்பதையும் பெருமை பொங்க எடுத்துரைத்தனர்.

திராவிட இயக்கத்தின் முன்னோடி அரசியல் இயக்கமான நீதிக் கட்சியின் ஆட்சியிலேயே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப் பட்டதையும் அதன் தொடர்ச்சியாக டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் சட்டமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதையும்கூட எடுத்துரைத்தனர். கலைஞரின் பெரியார் நினைவு சமத்துவ புரம் திட்டத்தின்படி, குடும்பத் தலைவியின் பெயரில் வீட்டினைப் பதிவு செய்து கொடுத்து அவர்களை உரிமையாளராக்கியதையும் குறிப்பிட்டனர். அதே வழியில், கழகத் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகள் பதிவு செய்யப்படுவதையும் குறிப்பிட்டு, இது தந்தை பெரியாரின் மண் என்பதை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்தனர்.

நாடாளுமன்றத்தில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை தேர்தல் ஆதாயம் கருதி நிறைவேற்றிய பா.ஜ.க.வின் இரட்டை வேடத்தையும் தோலுரித்தது மகளிர் உரிமை மாநாடு. ஜனநாயக விரோத பா.ஜ.க அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் சிங்கங்களாக கர்ஜனை செய்வதையும், தங்களைப் போன்ற எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்டோர் துணை நிற்பதையும் உளப்பூர்வமாக எடுத்துரைத்தனர்.

பிரதமர் மோடி உள்பட பா.ஜ.க.வின் தலைவர்கள் தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு சென்றாலும் தி.மு.க. மீது வெறுப்பை விதைத்து வரும் நிலையில், இந்தியாவில் பாதுகாப்பு மிகுந்த, நல்லிணக்கம் கொண்ட, சமூக நீதிக் கோட்டையாக தி.மு.க. ஆளும் தமிழ்நாடுதான் இருக்கிறது என்பதை இந்தியாவின் பெண் அரசியல் தலைவர்கள் உரக்கச் சொல்லி, டெல்லி வரை கவனத்தை ஈர்த்துள்ளனர்.

மாநாட்டில் நிறைவுரையாற்றிய கழகத் தலைவர் அவர்கள் திராவிட மாடலும் திராவிட இயக்கக் கொள்கையும் இந்தியா முழுமைக்கும் தேவைப் படுவதை வலியுறுத்தி, இதே ஒற்றுமையுடன் இந்தியா கூட்டணி மேலும் வலுப்பெற்று பா.ஜ.க.வை வீழ்த்தும் என உறுதி தெரிவித்ததையும், வடமாநிலத் தொலைக்காட்சிகள் இந்தி உள்ளிட்ட மொழிகளில் சப்டைட்டிலுடன் வெளியிட்டன.

கும்மிடிப்பூண்டிக்கு அந்தப் பக்கம் தி.மு.க.வைத் தெரியுமா என்று கேட்ட கிணற்றுத் தவளைகளின் செவிட்டில் அடித்தாற்போல தி.மு.க.வும் அதன் திராவிட மாடல் ஆட்சிநெறியும் குமரி முதல் இமயம் வரை கொடிக் கட்டிப் பறப்பதை கவிஞர் கனிமொழி எம்.பி. அவர்கள் முன்னெடுத்த மகளிர் உரிமை மாநாடு மெய்ப்பித்துள்ளது. மாநாட்டில் கழகத் தலைவர் அவர்கள் சொன்னது போல, சென்னை சங்கமம் நிகழ்வை சிறப்பாக நடத்தி வரும் கவிஞர் இந்திய சங்கமத்தை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெண் உரிமைத் திட்டங்கள் வெறும் வாக்கு அரசியலுக்கானதல்ல, அவை பெண் விடுதலைக்கான சிறகுகள், ஆண்பெண் சமத்துவத்துன் அடையாளம். அதனால்தான் பல மாநிலங்களிலும் வந்திருந்தவர்கள், “ஸ்டாலின் அண்ணா.. கனிமொழி அக்கா” என நெஞ்சம் நிறைந்த சொற்களை வெளிப்படுத்தி மகிழ்ந்தார்கள்.

இந்தியப் பெண்களின் உரிமைக் குரலாக ஒலிக்கிறது திராவிடக் கொள்கை. அதனை உறுதிப்பட நிறைவேற்றி வருகிறார் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர். அனைவருக்கும் அனைத்தும் என்கிற திராவிட மாடல் இனி இந்தியா கூட்டணியின் கொள்கை முழக்கமாகி, இந்தியாவை ஆளும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை மகளிர் உரிமை மாநாட்டில் உரையாற்றியவர்கள் உறுதி செய்துள்ளனர்.

---

### போலி நிறுவனங்களைப் பயன்படுத்தி ரூ.50 ஆயிரம் கோடி மோசடி!

# அதானி நிலக்கரி ஊழலை மூடி மறைக்கும் மோடி!

### ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக். 18 -

இந்தோனேசியாவில் இருந்து இந்தியாவிற்கு நிலக்கரி இறக்குமதி செய்ததில் போலி நிறுவனங்களைப் பயன்படுத்தி ரூ.50 ஆயிரம் கோடி அளவில் அதானி நிறுவனம் செய்துள்ள ஊழலை மோடி மூடி மறைக்கிறார் என்று ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தீக்கதிர்

2023 அக்டோபர் 17 செவ்வாய்க்கிழமை

அதானி நிலக்கரி ஊழலை மூடி மறைக்கும் மோடி

இந்தோனேசியாவில் இருந்து இந்தியாவிற்கு நிலக்கரி இறக்குமதி செய்ததில் அதானி குழுமம், போலி நிறுவனங்களைப் பயன்படுத்தி சுமார் ரூ.50 ஆயிரம் கோடி அளவிற்கு மோசடி செய்திருப்பது அம்பலமாகி இருக்கிறது.

அதானி குழுமத்தின் இந்த ஊழல் முறை கேடுகளை, இங்கிலாந்தில் இருந்து வெளியாகும்

இது குறித்து 17.10.2023 தேதிய ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தோனேசியாவில் இருந்து இந்தியா விற்கு நிலக்கரி இறக்குமதி செய்ததில் அதானி குழுமம், போலி நிறுவனங்களைப் பயன்படுத்தி சுமார் ரூ. 50 ஆயிரம் கோடி அளவிற்கு மோசடி செய்திருப்பது அம்பலமாகி இருக்கிறது.

அதானி குழுமத்தின் இந்த ஊழல் முறை கேடுகளை, இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் ‘பைனான்சியல் டைம்ஸ்’ (Financial Times) ஏடு அம்பலப்படுத்தியுள்ளது

இந்தோனேசியாவில் இருந்து இந்தியா விற்கு இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியின் விலையை இரு மடங்கு அதிகமாகக் காட்டி அதானி நிறுவனம் மோசடி செய்துள்ளதாகவும், கடந்த 2018 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை தங்குதடையின்றி இந்த நிலக்கரி இறக்குமதி ஊழலை செய்து வருவதாகவும் கூறியுள்ளது.

2019 மற்றும் 2021க்கு இடையிலான 32 மாதங்களுக்குள் அதானி நிறுவனம் இந்தோனேசியா விலிருந்து இந்தியாவிற்கு மேற்கொண்ட 30 நிலக்கரி ஏற்றுமதி வர்த்தகத்தை மட்டும் ஆய்வு செய்துள்ளது. இதில், கடந்த இரண்டு ஆண்டுகளில், அதானி குழுமமானது, தைவான், துபாய் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள கடல்சார் போலி இடைத்தரகர்களைப் பயன்படுத்தி 5 பில்லியன் டாலர் (சுமார் 42 ஆயிரம் கோடி) மதிப்புள்ள நிலக்கரியை சந்தை விலையை விட இரு மடங்கு விலையில் இறக்குமதி செய்துள்ளதாகவும், அனைத்து ஏற்றுமதி வர்த்தக சந்தர்ப்பங்களிலும், இறக்குமதி நிலக்கரி யின் விலையை அதிகமாகக் காட்டி, அதானி நிறுவனம் ஆதாயம் அடைந்துள்ளதாகவும் ‘பைனான்சியல் டைம்ஸ்’ கண்டறிந்துள்ளது.

சந்தையிலேயே நிலக்கரி விலை அதிகமாக உள்ளது. அவ்வளவு விலை கொடுத்து வாங்கித் தான் உங்களுக்கு மின்சாரம் தயாரித்து வழங்குகிறேன். எனவே, மின்சாரக் கட்டணம் அதிகமா கத்தான் இருக்கும். அதை நீங்கள் தருவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிர்ப்பந்தத்தை அதானி மாநில மின் விநியோக நிறுவனங்களு க்கு ஏற்படுத்தியுள்ளார். அதன்மூலமும் பல ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதானி கொள்ளை லாபம் அடித்துள்ளார்.

முதலில் நிலக்கரி கொள்முதலிலேயே, தனது மறைமுக இடைத்தரகர் (Offshore) நிறுவ னங்களைப் பயன்படுத்தி பல ஆயிரம் கோடிகளை லாபமாக பார்க்கும் அதானி, பின்னர் மக்க ளிடம் அதிக விலைக்கு மின்சாரத்தை விற்று அதன்மூலமும் கொள்ளை லாபம் சம்பாதித்திருக்கி றார் என்பதுதான் பைனான்சியல் டைம்ஸ் முன்வைக்கும் குற்றச்சா ட்டாகும். அதானியின் இந்த ஊழலை அவரது நண்பரான மோடி ஆதரவு ஊடகங்கள் மூடி மறைத்துவிட்டன. இவர்கள் எல்லோரும் கூட்டுக் களவாணிகள். தேசத்தையே கொஞ்ச கொஞ்சமாக அரித்து தின்னுபவர்கள்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் டி.ஆர்.பி.ராஜா வழிகாட்டுதலின்படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், சார்பு அணி நிர்வாகிகள் பொன் சித்தார்த், சி.விஸ்வநாத், ப.கிருபாகரன், சர்தார்ஜான் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.